# யூலை – 22 – திங்கள்

## புனித மகதலா மரியா

## “நான் ஆண்டவரைக் கண்டேன்” யோவா 20:18

---------------------------------------------------------------

**முதல் வாசகம்: இனிமைமிகு பாடல் 3:1 – 4**

**அல்லது 2 கொரிந்தியர் 5:114-17 வாசகம் வேறுபடலாம்)**

இரவுநேரம் படுக்கையில் இருந்தேன் என் உயிர்க்குயிரான அன்பரைத் தேடினேன் தேடியும் அவரை நான்கண்டேன் அல்லேன்! ”எழுந்திடுவேன் நகரத்தில் சுற்றிவருவேன் தெருக்களிலும் நாற்சந்திகளிலும் சுற்றி என் உயிர்க்குயிரான அன்பரைத் தேடுவேன்” தேடினேன் தேடியும் அவரைக்கண்டேன் அல்லேன்! ஆனால் என்னைக்கண்டனர் சாமக்காவலர் நகரைச்சுற்றி வந்தவர்கள் அவர்கள். ”என் உயிர்க்குயிரான அன்பரை நீங்களேனும் கண்டீர்களோ?” என்றேன். அவர்களைவிட்டுச் சற்று அப்பால் சென்றதுமே கண்டேன் என் உயிர்க்குயிரான அன்பர்தமை. அவரைச் சிக்கெனப்பிடித்தேன் விடவே இல்லை. என் தாய்வீட்டுக்கு அவரைக் கூட்டிவந்தேன் என்னைக் கருத்தாங்கியவளின் அறைக்குள் அழைத்து வந்தேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! என் உயிர் உம்மீது
தாகம் கொண்டுள்ளது.

**நற்செய்தி : யோவான் 20 : 1 – 2,11 - 18**

வாரத்தின் முதல்நாளன்று விடியற்காலையில் இருள்நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச்சென்றார் கல்லறைவாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்புகொண்டிருந்த மற்றச்சீடரிடமும் வந்து, ”ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டுபோய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!” என்றார். மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தார் அழுதுகொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந் தார்கள். அவர்கள் மரியாவிடம், ”அம்மா, ஏன் அழுகிறீர்?” என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், ”என் ஆண்டவரை எடுத்துக் கொண்டுபோய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எனக்குத் தெரியவில்லை” என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவரிடம், ”ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?” என்றுகேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், ”ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச்செல்வேன்” என்றார், இயேசு அவரிடம், ”மரியா” என்றார். மரியா திரும்பிப்பார்த்து, ”ரபூனி” என்றார். இந்த எபிரேயச்சொல்லுக்கு ”போதகரே” என்பது பொருள். இயேசு அவரிடம், ”என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், ”என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்” எனச்சொல்” என்றார். மகதலா மரியா சீடரிடம் சென்று, ”நான் ஆண்டவரைக் கண்டேன்” என்றார் தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

**தியானம்:** இன்றைய நாளில் நாம் புனித மதலேன் மரியாவை நினைவு கூருகின்றோம். இவர் ஒரு விபச்சாரப் பெண்ணாக இருந்தார் என்றும் யேசு அவரை சந்தித்த போது அவர் 7 அசுத்த ஆவிகளால் பீடிக்கப் பட்டிருந்தார் என்றும் அதில் இருந்து விடுதலை பெற்றபின் யேசுவின் பாதங்களைக் கண்ணீரால் கழுவி தன் கூந்தலால் துடைத்து முத்தமிட்டவர் என்றும் வரலாறு கூறுகின்றது. யேசுவின் இராஉணவு என்று வரையப்பட்ட ஓவியத்தில் வலதுபுறம் இருப்பவர் இவர் என்ற ஒரு சர்ச்சையும் உள்ளது. இவ்வாறான கருத்துகளுக்கு மத்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் தாம் ஆற்றிய உரையில் மதலேன் மரியாளை நம்பிக்கையின் திருத்தூதராக சுட்டிக்காட்டுகின்றார். ”ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் ” என்பதே கிறிஸ்தவத்தின் தலையாய விசுவாசமும் நற்செய்தியும் ஆகும். அதை முதன் முதலில் உலகுக்கு அறிவித்தது ஒரு பெண். அவள் தான் மதலேன் மரியாள். ஏதேன் தோட்டத்தில், வாழ்வு நிறைந்திருந்த நிலையில் ஏவாள் என்னும் முதல் அன்னை மனிதனுக்கு சாவினை கனி வழியாக அறிவித்தாள். யேசுவின் கல்லறையின் முன், சாவும் துயரமும் நிறைந்திருந்த நிலையில் மதலேன் மரியாள் என்னும் பெண் மனிதனுக்கு வாழ்வினை நற்செய்தி என்னும் இயேசுவின் கனி வழியாக அறிவித்தாள். நற்செய்திப் பணியில் யேசுவின் முதல் பெண் சீடராக அன்னை மரியாளுக்கும் பின் இவர்தான் பார்க்கப் படுகின்றார். இன்று நாமும் பலவகையான அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்கி இருக்கலாம். பணம், பட்டம், பதவி, சுகபோக வாழ்வு என்று பலவிதமான ஆசைகளால் அலைக்கழிக்கப்பட்டு அதன் பின்னே ஓடிக்கொண்டிருக்கலாம். அவ்வாறான வாழ்வில் இருந்து விடுதலை பெற்று வாழ இன்றைய நாளில் நாம் நினைவு கூரும் புனிதை நம்மை அழைக்கின்றார். அவரின் வாழ்வு யேசுவை சந்தித்ததால் மாறியது போல் எம் வாழ்வும் மாறவேண்டும். மாற்றம் ஒன்றே நம்மை வாழ வைக்கும். சிந்திப்போம்.